**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.36/2003**

Deposition of **<u>P.W.6</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 12.02.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ரகுபதி Father's Name : காங்கமுத்து

Calling : கிராம நிர்வாக அலுவர்,
ராமநாயக்கன்பாளையம் தெற்கு.

துவக்க நேரம்: 12.24 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு முதல் விசாரணை :</u>**

1. நான் தற்பொழுது ராமநாயக்கன்பாளையம் தெற்கு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்று நான் சாட்சியம் அளிக்கிறேன். நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள சர்வே எண்கள். 75/3, 74/1, 73/7, 73/6, 73/10 உட்பிரிவு செய்யப்பட்ட அ பதிவேட்டின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **<u>நீ.ம.சா.ஆ. Ex.X5</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சர்வே எண்கள் உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பு உள்ள அ பதிவேட்டின் சான்றிட்ட நகலை தாக்ல செய்கிறேன். மேற்கண்ட ஆவணம் **<u>நீ.ம.சா.ஆ. Ex.X6</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. மேற்படி சர்வே எண்கள், மேற்கண்ட ஆவணங்களில் காலனி பட்டாயென எதனால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த சர்வே எண்களில் உள்ள நிலங்கள் நில குடியேற்ற சங்கத்தால் எடுக்கப்பட்டு மக்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டது அதனால் காலனி பட்டா என குறிப்பிடப்பட்டுளளது, பட்டா எண்.160.

3. மேற்படி நிலங்கள் தற்பொழுது என்னவாக உள்ளது என்றால் நிலகுடியேற்ற சங்கம் கலைக்கப்பட்டு, அதன்மூலம் வழங்கப்பட்ட நிலங்கள் அரசாங்கத்தால் மீண்டும் எடுக்கப்பட்டு, தரிசாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தரிசாக மாற்றப்பட்ட நிலங்கள் எத்தனை ஏக்கர் இருக்கும் என்றால் சுமார் 100 ஏக்கர் இருக்கும். மேற்படி சர்வே எண்களுக்குண்டான சிட்டாவில் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **நீ.ம.சா.ஆ. Ex.X7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சர்வே எண்களுக்கான அடங்கல் தற்பொழுது உள்ளதா என்றால் கணினி பதிவேற்றத்திற்கு பின்னிட்டு அடங்கல் இல்லை, ஆனால் அதற்கு முன்பு உள்ள அடங்கல் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ளது.

4. பொதுவாக சிட்டாவில் உள்ள நிலம் யார் அனுபவத்தில் இருக்கும் என்றால் சிட்டாவில் யார் பெயர் உள்ளதோ, அவர்கள் அனுபவத்தில்தான் இருக்கும். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட சர்வே எண்களில் உள்ள நிலங்கள் யார் அனுபவத்தில் உள்ளது என்று களப்பணி செய்தேனா என்றால் இல்லை.

**1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1. நான் தற்பொழுது தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் உள்ள வருவாய் ஆவணங்களை பரிசீலனை செய்தபின்னர்தான் தாக்கல் செய்துள்ளேன். தற்பொழுது தாக்கல் செய்யப்பட்டுள்ள சிட்டா அதில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களில் உள்ள நிலம் யார் அனுபவத்தில் உள்ளது என்பதை குறிக்கும் என்றால் சரிதான்.

2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்:12.54 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/- D. Jansi Rani,
Additional District Munsif, Attur.